O.S.69-2018

# முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை

அ.வ.எண்.69/2018

பிரதிவாதி தரப்பு 2வது சாட்சி மலையப்பன் என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. அனுராதா, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. மலையப்பன் | வயது | : | 60/23 |
| தகப்பனார் பெயர் | : | பொன்னையா | தாலுகா | : | திருமயம் |
| கிராமம் | : | லெம்பலக்குடி | தொழில் | : | விவசாயம் |

நாள்-19.12.2023

பி.வா.சா.2

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) வாதி எனது குடும்ப நண்பர் என சொல்லியுள்ளேன். வாதியை பற்றிய விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும்.

2) வாதி எங்கு குடியிருந்தார் என்று எனக்கு தெரியாது.

3) வாதி, பிரதிவாதிக்கிடையே உள்ள கொடுக்கல், வாங்கல் சம்மந்தமாக எனக்கு தெரியும். ஏலச்சீட்டு சம்மந்தமான பிரச்சினை என்று எனக்கு தெரியும்.

4) வாதி, பிரதிவாதி பணம் தர வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

5) 3ம் தேதியன்று நான் சென்றதாக சொல்லும்போது, வாதியும், பிரதிவாதியும் சுமூகமாக பேசிக்கொண்டிருக்கவில்லை.

6) 27.07.2018க்கு பிறகு எங்களுக்குள் பேச்சு வார்த்தைஇல்லை என்று வாதி சாட்சியம் அளித்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

7) 3ம் தேதியன்று பத்திரம் யார் வாங்கி வந்தார்கள், யார் எழுதியது என்று என்று தெரியுமா என்றால் இரண்டு பேருமே சென்றார்கள், பின்னர் தட்டச்சு செய்து கொண்டு வந்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். அவர்கள் கையெழுத்து போட்டதை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் கடைக்குள் வைத்துதான் கையெழுத்து போட்டார்கள்.

8) நான் சொல்வது போல் 3ம் தேதியன்று வாதி எந்த ஆவணமும் எழுதி கொடுக்கவில்லை என்றாலும், நான் ஊர்க்காரர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9) உண்மையிலேயே வாதி இந்த ஆவணத்தை எழுதி கொடுத்திருந்தால், 3ம் தேதியன்று காவல் கண்காணிப்பாளரிடம் பிரதிவாதி புகார் கொடுக்கும்போது, பி.வா.சா.ஆ.1 ஆவணம் குறித்து அந்த புகாரில் சொல்லியிருப்பார் என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக ஆவணம் தயாரிப்பதற்கு உடந்தையாக இருந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10) பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் 25.09.2018ம் தேதியன்று காசோலைகள், புரோநோட்டுகள, கையெழுத்திட்ட பச்சை பேப்பர்கள் மற்றும் மீதமுள்ள தொகை ஆகியவற்றை ஒப்படைப்பதாக எழுதப்பட்டிருந்தது என்றால் சரிதான்.

11) அதே 03.09.2018 -ம் தேதியன்று பிரதிவாதி ஆவணங்களை ஒப்படைக்க வேண்டும் என்றும், தொகை கொடுக்க வேண்டும் என்று புகார் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. இது சம்மந்தமாக நான் பிரதிவாதியிடம் நான் கேட்கவில்லை.

12) உண்மையிலேயே பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதி கொடுத்திருந்தால் இதுபோன்று புகார் கொடுக்க வாய்ப்பில்லை என்றால் எனக்கு தெரியாது.

13) வாதி கடை வைத்திருப்பதாக சொல்வது கிழக்கு பார்த்த கடை.

14) நான் வாதி கடையில் சாமான்கள் வாங்கியதாக சொல்வதற்கு பில்கள் எதுவும் என்னிடம் இல்லை.

15) வாதி கடையில் நான் எந்த காலத்திலும் சாமான்கள் வாங்கியது இல்லை என்றாலும், பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா வழங்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.